# வாலிபன்
# VAALIPAN

வாலிபர்களுக்கான மாதாந்த சஞ்சிகை

இதழ் - 42, வைகாசி 2011



"...உன் தேவனாகிய கர்த்தர்
பூமியிலுள்ள சகல ஜாதிகளிலும்
உன்னை மேன்மையாக வைப்பார்"
(உபா. 28 : 1)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாலிபன்
# VAALIPAN

**அன்பான வாலிபன் வாசகர்களுக்கு!**

42வது 'வாலிபனினூடாக' உங்களைச் சந்திப்பதில் மகிழ்ச்சி. 3½ வருடங்கள் இந்த ஊழியத்தில் உங்களையும் எங்களையும் இணைத்தவரை ஸ்தோத்தரிக்கிறேன்.

கடந்த மாதம் நடைபெற்ற வடக்கு – கிழக்கு வாலிபர் பாச றைகளுக்காக 'வாலிபன்' ஊழியம் தனது மனமுவந்த உதவித் தொகையினைக் கொடுத்துதவியிருந்தது. குறிப்பாக, 'வன்னி' வாழ் 25 வாலிபர்கள் வடக்கு பாசறையில் கலந்துகொள்ள நிதியுதவி வழங்கியிருந்தது குறிப்பிடத்தக்கது. இதற்காக தங்களது உதவிக் கரங்களை நீட்டிய அனைவருக்கும் நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மேலும், 60 முழு வேதாகமங்கள் 'வன்னி ஊழியத்திற்காய்' கடந்த மாதங்களில் வழங்கியிருந்தோம். இதற்காய் கரங்களை பலப்படுத்திய ஆண்டவரை ஸ்தோத்தரிக்கிறேன்.

தொடர்ந்தும், 'வாலிபன்' ஊழியங்களினூடாக எதிர்வரும் விடு முறை காலங்களைப் பயன்படுத்தி 'வாலிபர் பாசறை', வடக்கு – கிழக்கு வாலிபர் சந்திப்பு, சிறுவர் நிகழ்ச்சிகள் ஒழுங்குபடுத்த தீர்மானித் துள்ளோம். இதற்காய் தயவாய் ஜெபிக்கவும். குறிப்பாக இதனு டைய தேவைகள் சந்திக்கப்படவும், வாலிபர்களுக்குள்ளே ஒரும னப்பாடும் ஐக்கியம் நிலவவும் ஜெபிக்கவும்.

கர்த்தர் வர தாமதித்தால் அடுத்த இதழில் சந்திக்கும் வரை,

*கிறிஸ்துவின் பணியில்*
*ஆசிரியர்*



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஜோன் வெஸ்லி

**கனம் ஜோன் வெஸ்லி ஐயரின் வாழ்க்கைச் சரிதம் தொடர் நிகழ்வாய்....... 13**

சகோ. இராஜநாயகம் சுரேந்திரன்

**வெ**ஸ்லி ஐயர் "ரூட்டிலிருந்து" "ஒக்ஸ்போட்டிற்கு" திரும்பியவுடன் அங்கேயுள்ள பல்கலைக்கழகத்திலிருந்த ஊக்கம் நிறைந்த சில வாலிபர்கள் தனது சகோதரன் சார்ல்ஸ் வசம் இருப்பதைக் கண்டார். அவ்வாலிபர்கள் மகிழ்ச்சியுடன் வெஸ்லி ஐயரை வரவேற்று, அவரைத் தம் குழுவின் தலைவராக ஏற்றுக்கொண்டனர். அனைவருக்கும் இது திருப்தியாகக் காணப்பட்டது.

"ஒக்ஸ்போட்டிற்கு" வருவதற்கு முன்பாக வெஸ்லி ஐயர் அநேக மைல்கள் பிரயாணம் செய்து "தேவனுடைய மனிதர்" ஒருவரைச் சந்திக்கச் சென்றிருந்தார். அப் பக்தியுள்ள மனிதர் சொன்ன வார்த்தைகள் வெஸ்லி ஐயரின் செவிகளில் ஒலித்துக்கொண்டேயிருந்தன. அவை "ஜோன், கர்த்தருக்கு நீ ஊழியம் செய்யவும், பரலோகம் செல்லவும் விரும்புகிறாய். அப்படியானால் ஒன்றை மட்டும் நினைவில் வைத்துக்கொள். தனியாக நீ கர்த்தருக்கென்று உழைக்க முடியாது. அதனால் பக்தியுள்ள நண்பர்களைக் கண்டுபிடித்துக் கொள். ஏனெனில் வேதாகமத்தில் தனியான பக்தி கிடையாது" ரீங்காரமிட்ட இந்த வார்த்தைகள் இறுதிவரை வெஸ்லி ஐயருக்கு துணை நின்றன.

"ஒக்ஸ்போட்டில்" இந்த தூய்மைக் குழுவைச் சேர்ந்த வாலிபர்கள் ஆவிக்குரிய காரியங்களில் கருத்தாக இருக்க முயன்றனர். தூய்மையான ஒழுக்கமான வாழ்க்கை வாழ வேண்டுமென வைராக்கியம் கொண்டனர். வாழ்க்கையில் பாவங்களுக்கு இடம் கொடுக்காதபடிக்கு போராட உறுதி பூண்டனர். சர்வ வல்லவராகிய கிறிஸ்து இந்த வாஞ்சைகளில் ஒருமித்திருந்த வாலிபர்களுக்காக வருங்காலத்தில் ஒரு பெரிய திட்டத்தை வைத்திருந்தார். இந்தக் குழுவினர் மேற்கொண்ட முதல் வேலை, வேதாகமம் பற்றிய ஆய்வாகும். இந்த ஆய்வை அவர்கள் ஊக்கத்துடனும், பக்தியுடனும், விடாமுயற்சியுடனும் நடத்தினர். ஆரம்பத்தில் நான்கு வாலிபர்கள் தான் இக்குழுவில் இருந்தனர். வேதாகமம் என்ற ஒரே புத்தகத்தை தான் அவர்கள் ஆய்வு செய்ய முயன்றனர். எல்லாக் காரியங்களுக்கும் தேவையான வழிநடத்துதலை வேதாகமத்தில் தான் தேடினர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மற்றவர்கள் இவர்களை "வேதாகமப் பூச்சிகள்" என்று கேலி செய்தார்கள். இவர்களோ இக்கேலிகளை ஒரு பொருட்டாகவே எண்ணவில்லை. வேதாகமத்தை நன்றாகப் படித்து, அதிலுள்ள கருத்துக்களை அதே முறையில் பேச வேண்டுமென்பது தான் அவர்களது ஒரே நோக்கமாக இருந்தது.

இவ்வாறு இவர்கள் இருந்த நாட்களில் தான் "கிறைஸ்ட் சர்ச்" கல்லூரியில் படித்த ஒரு மாணவன் தூய்மைக் குழுவினருக்கு "மெதடிஸ்ற்" (ஒழுங்குமுறையானவர்) என்ற பெயரை வைத்தான். இந்தப் பெயர் அவர்களுக்கு நிலைத்துவிட்டது. இன்று கோட்டைமுனைத் திருச்சபை அடங்க, உலகின் கோடியெல்லை வரைக்கும் "மெதடிஸ்ற்" என்ற பெயர் புகழ்பெற்று விளங்க, இங்கேயிருந்துதான் கோடு கிழிக்கப்பட்டதென்ற கருத்து வெள்ளிடைமலை போன்ற உண்மையானது.

தூய்மைக் குழுவின் செயற்பாடுகள் விரைவில் கல்லூரியின் கவனத்தை ஈர்க்க ஆரம்பித்தது. கல்லூரியின் ஏனையவர்கள் இக்குழுவினரைப் பார்த்துக் கிண்டலும், கேலியும் செய்து வந்தனர். ஆனாலும் இவர்களைச் சிறிய அளவில் தானும் எவராலும் அசைக்கமுடியவில்லை. இவர்கள் ஏழைப் பிள்ளைகளுக்குப் பாடம் சொல்லிக் கொடுத்தனர். சிறையில் வாடியவர்களைச் சந்தித்து சத்தியம் சொல்லி, அவர்களை ஆறுதல்படுத்தினர். அந்தக் காலத்தில் கல்லூரி மாணவர்கள் இப்படியாகத் தாழ்மையான ஊழியம் செய்வது ஒரு புதிய காரியமாக இருந்தது. மற்ற மாணவர்களுக்கு இவர்களுடைய சேவை, தங்களுடைய உயர்ந்த நிலையைக் கேவலப்படுத்துவதாகத் தோன்றிற்று. அந்த மாணவர்கள் ஒரு கூட்டத்தை ஏற்பாடு செய்து, அந்தக் குழுவினர் செய்யும் ஊழியங்களைக் கண்டித்தனர். ஆனால் தூய்மைக் குழுவினரோ இம்மாதிரியான எதிர்ப்பைக் குறித்துக் கவலைப்படவில்லை. உண்மையான பக்தியைத் தேடும்போது இதற்கு மேலான எதிர்ப்பை சந்திக்கத் தயாராக இருக்க வேண்டுமென்பதை நன்கு உணர்ந்திருந்தனர்.

தூய்மைக் குழுவினரான இந்த நண்பர்களுடைய வேதக் காரிய அட்டவணையை வாசகர்களுக்கு இவ்விடத்தில் தருவது சிறப்பாக அமையுமென சிந்திக்கின்றேன். ஒவ்வொரு ஞாயிறு மாலையும் ஒன்று கூடினார்கள். ஆறு மணியிலிருந்து ஒன்பது மணிவரைக்கும் "ஒன்று கூடல் " நடைபெறும். ஜெபத்துடன் ஆரம்பிக்கும் கூட்டத்தைத் தொடர்ந்து கிரேக்க மொழி வேதாகம ஆய்வு நடைபெறும். கடந்த வார ஊழிய நிகழ்வுகள் பற்றி ஆராய்ந்தார்கள். எதிர்வரும் ஊழிய நிலவரம் பற்றிப் பேசினார்கள். கிரேக்க மொழியில் எழுதப்பட்ட புதிய ஏற்பாட்டையும், இலக்கியங்களையும் கற்றார்கள். ஒவ்வொரு வாரமும் கர்த்தரின் பரிசுத்த பந்தியில் பங்குபற்றினார்கள். மாதத்தில் ஒரு தடவை உபவாசத்துடன் கூடிய ஜெபத்தினை மேற்கொண்டார்கள். தங்களையே நன்கு சோதித்து ஆராய்ந்து வாழும் ஒரு நல்ல வழியை வைத்துக் கொண்டார்கள்.

**(வெஸ்லி மீண்டும் வருவார்.....)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# யார் குற்றவாளி ???

(இது நம் சிந்தனைக்கு)

ரோசியும் மேரியும் ஒரே கிராமத்தைச் சேர்ந்தவர்கள். ஒரே பாடசாலையில் படித்தவர்கள். நல்ல நண்பிகள். ஒன்றாக பல்கலைக்கழக அனுமதியும் கிடைத்தது. என்ன ஆச்சரியம்! பல்கலைக்கழக விடுதியில் கூட இருவருக்கும் ஒரே அறையில் தங்கும் வாய்ப்புக் கிடைத்தது. இதுவரையிலும் கிடைத்திராத புது அனுபவமாக இது இவர்களுக்கு அமைந்தது. புதிய சூழல், பல புதிய நண்பர்களின் நட்புறவு, கட்டுப்பாடற்ற நிலைமை, பெற்றோர்களதும் உறவினர்களதும் கண்டிப்புகள் அற்ற நிலை என எல்லாமே புதியதாக இருந்தது. சிறு வயதிலேயே இயேசுக்கிறிஸ்துவை சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்ட ரோசிக்கோ எச்சூழ்நிலையிலும் தன் பரிசுத்தத்தை காத்துக்கொள்வது கடினமாக இருக்கவில்லை. ஆனால். பெயரளவில் கிறிஸ்தவளாய் இருந்த மேரிக்கோ தன் பரிசுத்த வாழ்வைக் காப்பாற்றுவது மிகவும் கடினமாக இருந்தது. கட்டுப்பாடுகளில்லாமல் தன் முன் பரந்து விரிந்து அழகாய் தெரிந்த உலகத்தின் மாய வலையில் கொஞ்சம் கொஞ்சமாக சிக்கிக் கொண்டாள் மேரி. இந்த வயதில் அனுபவிக்காமல் வேறு எப்போது அனுபவிப்பது என மனம் கேட்ட கேள்விக்கு தங்குதடையில்லாமல் கண்கள் இச்சித்த படியெல்லாம் மனம் போன போக்கில் உலகத்தை அனுபவித்து வாழத் தொடங்கினாள். மேரி போகும் பாதை சரியாக இல்லை எனத் தெரிந்த போதும் அதைப் பார்த்தும் பார்க்காதது போல் இருந்தாள் ரோசி. "நான் அவளுக்காக ஜெபிக்கிறேன் தானே" எனத் தன்னைத்தானே சமாதானம் பண்ணிக்கொண்டு வாழ்ந்தாள் ரோசி.

பல நண்பர்களின் தொடர்பு, உல்லாசமான வாழ்க்கை, களியாட்டம் என சென்றது மேரியின் வாழ்க்கை. வரவர படிப்பிலும் கவனம் குறைந்து கொண்டே போனது. எல்லாவற்றுக்கும் சிகரம் வைத்தாற்போல் "என் உயிரை விடவும் உன்னை நேசிக்கின்றேன்" எனக் கூறிக் கொண்டு ஒரு காதலனும் வந்து சேர்ந்தான். விரிவுரைகளுக்குச் செல்லாது காதலனுடன் சுற்றுவதும். இரவிரவாக மொபைலில் கதைப்பதும், SMS அனுப்புவதுமாக கடந்து சென்றது மேரியின் வாழ்க்கை. இதையெல்லாம் ரோசி அவதானித்தாலும் தனது நண்பியை எச்சரிக்க வேண்டும் என அவள் நினைக்கவில்லை." சொன்னால் என்ன நினைப்பாள்? கோபித்துக் கொள்வாளே" என நினைத்து மேரியிடம் எதையும் கதைப்பதற்கு ரோசி துணியவில்லை.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாட்களும் விரைவாக ஓடிக்கொண்டே இருந்தது. பல்கலைக்கழக பரீட்சைகளில் மேரியின் பெறுபேறுகள் மிகக் குறைவாகவே காணப்பட்டது. அவளுடன் சேர்ந்து திரிந்த நண்பிகளும் படிப்படியாக விலகிச் செல்ல ஆரம்பித்தனர். சில நாட்களின் பின் உயிரைக் கொடுப்பேன் என்ற காதலன் தன் நண்பியுடன் நெருக்கமாக சேர்ந்து திரிவதைக் கண்டாள் மேரி. "எனக்கு துரோகம் பண்ணிவிட்டாயே பாவி எனக் கதறிய மேரியைப் பார்த்து "கண்டி மழையையும், கம்பஸ் காதலையும் நம்பமுடியாது. எப்ப வரும் எப்ப போகும் என்று சொல்ல முடியாது. Take it easy எனக் கூறி துரத்திவிட்டான் அந்தக் காதலன். வாழ்வில் எல்லாமே வெறுமையாகிவிட்டதைப் போல் உணர்ந்தாள் மேரி. இனி என்ன வாழ்க்கை என அவள் மனம் அங்கலாய்த்தது. எல்லாராலும் கைவிடப்பட்ட நிலையில் ஆறுதலைத் தேடினாள், நிம்மதியைத் தேடினாள், சமாதானத்தை தேடினாள். எங்குமே அவைகள் கிடைக்கவில்லை. அப்போது தான் அவளுக்கு ரோசியின் ஞாபகம் வந்தது. விடுதி அறைக்கு ஓடிச் சென்றாள். எங்கோ செல்ல ஆயத்தமாகிய ரோசியை நிறுத்தி " உன்னோட கொஞ்சம் கதைக்க வேணும் ப்ளீஸ்" என கெஞ்சினாள். ஆனால், ரோசிக்கோ முக்கிய மான ஒரு விரிவுரை இருந்தது. " மாலையில் வந்து கட்டாயம் கதைப்பேன்" எனக் கூறியவளாய் சென்றுவிட்டாள். மாலை நேரம் விடுதிக்கு வந்த ரோசி எங்கும் ஒரே பரபரப்பாய் இருப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டாள். பொலிஸாரும் மாணவர்களும் கூட்டமாய் நின்றுகொண்டிருந்தார்கள். எங்கும் அமைதியற்ற நிலைமை காணப்பட்டது. அப்போது அங்கு நின்ற ரோசியின் நண்பி கண்ணீருடன் ஓடி வந்து "ரோசி.... மேரி தற்கொலை செய்து விட்டாள்" எனக் கூறி அழுதாள். ரோசிக்கு எல்லாமே இருண்டதைப்போல் ஆகியது. தலையிலடித்துக் கொண்டவளாய் "ஐயோ மேரி" எனக் கதறியவாறு தரையில் மயக்கமுற்று விழுந்தாள்.

இதை வாசிக்கும் என் பிரிய சிநேகிதர்களே! ஆரம்பத்தில் மேரியின் சிறு தவறுகளை ரோசி எச்சரித்திருந்தால் மேரியின் முடிவு இப்படி பரிதாபகரமாய் அமைந்திருக்காதே. இன்றும் நம்முடைய அநேக வாலிப நண்பர்கள் நம் கண் முன்னால் பல தவறுகளை செய்கிறார்கள். இவர்களை எச்சரிக்க வேண்டியது இயேசுக் கிறிஸ்துவின் பிள்ளைகளாகிய நம் கடமையல்லவா?... நாம் சிந்திப்போம்....

"மனுபுத்திரனே, உன்னை இஸ்ரவேல் வம்சத்தாருக்குக் காவலாளனாக வைத்தேன். நீ என் வாயினாலே வார்த்தையைக்கேட்டு, என் நாமத்தினாலே அவர்களை எச்சரிப்பாயாக. சாகவே சாவாய் என்று நான் துன்மார்க்கனுக்குச் சொல்லுகையில், நீ துன்மார்க்கனைத் தன் துன்மார்க்கமான வழியில் இராதபடிக்கு எச்சரிக்கும்படியாகவும், அவனை உயிரோடே காக்கும்படியாகவும், அதை அவனுக்குச் சொல்லாமலும், நீ அவனை எச்சரிக்காமலும் இருந்தால், அந்தத் துன்மார்க்கன் தன் துன்மார்க்கத்திலே சாவான். அவன் இரத்தப்பழியையோ உன் கையிலே கேட்பேன்." (எசேக்கியேல் 3:17-18)

சகோதரி வஜித்தா
கோட்டைமுனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உன் இளமையைக் குறித்து...!!



தலைப்பை பார்த்தவுடன் நகைச்சுவையாக உனக்கு தோன்றுகிறதா? இருக்கலாம். ஆனால் இன்று நீயும் நானும் நினைவில் வைத்திருக்க மறுக்கும் விடயம் தான் "நம்முடைய இளமை" என்பது.

இன்று உலகிலே இளமையைப் பேணக்கூடிய, இளமையைக் குறித்து கரிசனை அடைய வேண்டிய காரியங்களும், காரணங்களும் ஏராளமாகவே உள்ளன. வகைவகையான Creams, Face Packs, Lotions என்று கூற பலவுண்டு.

அழிந்துபோகும் உடலின் இளமையைப் பற்றி கரிசனையுள்ள நாம். கவனிக்க வேண்டிய முக்கிய காரியம் ஒன்றுண்டு.

அப்போஸ்தலனாகிய பவுல் தீமோத்தேயுவுக்கு எழுதும் கடிதத்திலே **"உன் இளமையைக்குறித்து ஒருவனும் உன்னை அசட்டைபண்ணாதபடிக்கு, நீ வார்த்தையிலும், நடக்கையிலும், அன்பிலும், ஆவியிலும், விசுவாசத்திலும், கற்பிலும், விசுவாசிகளுக்கு மாதிரியாயிரு". (1தீமோ 4:12)** என்று குறிப்பிடுகின்றார். இந்த வார்த்தையிலே மூன்று காரியங்கள் உள்ளன.

1. இளமையைக் குறித்து
2. மாதிரியாக இருக்க வேண்டிய காரியங்கள்
3. யாருக்கு முன் மாதிரி?

"உன் இளமையைக் குறித்து" என்று குறிக்கின்ற காரியம். நானும் நீயும் இளமைப்பருவத்தில் இருக்கின்றபோது எம்முடைய இளமையைக் குறித்து மட்டுமல்ல. நாம் எந்த வயதை அடைகின்ற போதிலும் ...... அதாவது நாம் முதிர் வயதை அடைகின்ற போதிலும் எம்முடைய இளமையைக் குறித்து மற்றவர்களுக்கு மாதிரியாக காணப்படவேண்டும் என்று பவுல் எழுதுகின்றார். அதைத்தான் ஆண்டவரும் நம்மிடம் எதிர்பார்க்கின்றார்.

வார்த்தையிலே. நடக்கையிலே. அன்பிலே, ஆவியிலே, விசுவாசத்திலே. கற்பிலே நாம் எப்படி இருக்கின்றோம்? ஜெபம் பண்ணும் போதும் கூட.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீண் வார்த்தைகளை அலம்ப வேண்டாம் என்று இயேசுவே கூறியிருக்கின்றார். எம்முடைய வாயிலிருந்து புறப்படுகின்ற ஒவ்வொரு வார்த்தையும் நல்ல, மாதிரியான, பெறுமதியானதாக இருக்கின்றதா? எம்முடைய நடக்கையிலே கிறிஸ்துவைக் காட்டுகிறோமா? அல்லது ஒழுக்கமற்ற, தாறுமாறு நிறைந்த, தடுமாற்றம் நிறைந்த நடக்கையாக உள்ளதா? அன்பிலே, ஆவியிலே, விசுவாசத்திலே எப்படி இருக்கின்றோம். மேலைத்தேய நாகரிக போர்வையுடன் கற்பைக் குறித்த சிந்தையே இல்லாமல் தினந்தோறும் நடக்கிறோமா? இன்று மிக வேதனைக்குரிய காரியங்களில் ஒன்று கிறிஸ்தவ வாலிபர்களின் வார்த்தைகளும் நடக்கைகளும் பல "துஷ்பிரயோகம்" என்கிற பதத்தின் வகைகள் அனைத்தையும் உள்ளடக்கியவைகளாகவே காணப்படுகின்றன. "கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள்" என்று கூறப்படும் பல வாலிபர்கள் இன்று இவ்வண்ணமாகவே வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

கிறிஸ்துவை அறியாத மக்கள் மத்தியில் "நான் கிறிஸ்தவன்", "நான் கிறிஸ்தவள்" என்று வேஷங்களோடு மார்தட்ட அல்ல. மாறாக **விசுவாசிகளுக்கு** மாதிரியாக வாழ கர்த்தர் அழைக்கிறார். எம்மோடு கூடவே இருக்கும் விசுவாசிகளுக்கே நாம் மாதிரியாக வாழ வேண்டும். அப்படி வாழுகின்ற போது எம்மூலமாய் கிறிஸ்துவை அறியாதவர்கள் கிறிஸ்துவை ஏற்றுக்கொள்வார்கள். **"எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு, ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது !!! - (1 கொரி 6:12)**

**சகோதரி R.நியோமி கஜாலினி**

# கவிதைப்போட்டி - 27

**கீழேயுள்ள வசனத்திற்குப் பொருத்தமான சமகால சிந்தனையோடு 4 வரிகளுக்குள் அடங்கக்கூடிய உங்கள் மனதில் தோன்றும் கவிதைகளை தபாலட்டையில் எழுதி அனுப்புங்கள். சிறந்த கவிதைகள் எதிர்வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படுவதுடன் பரிசில்களும் வழங்கப்படும்.**

**இறுதித் திகதி 31.05.2011**

**"...கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும்.... தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான்" (சங்.1:2)**

## கவிதைப் போட்டி - 26 ல் வெற்றிபெற்ற சிறந்த கவிதை

| | |
|---|---|
| "கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்து கொள்ளும்" (சங். 32:10) | வாலிபனே ஏனடா! உலக காரியங்களை நம்பிக்கொண்டு<br>பிரயோஜனமில்லாத வாழ்க்கை வாழ்கிறாய் - என்<br>தேவனை நம்பி வாழ்ந்து பாரடா....! அப்போது<br>புரியும் என் தேவனின் தயவான கிருபை உனக்கு....! |


க.வினோஜன்
பளியப்பாவெளி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குறுக்கெழுத்துப் போட்டி - 41

உருவாக்கம் : J.டெய்சி



## இடமிருந்து வலம்

01. இவனுடைய நாட்களோடே தேவன் 15 வருஷத்தைக் கூட்டினார் (திரும்பியுள்ளது).
04. பிலிப்பு இந்த பட்டணத்தைச் சேர்ந்தவர் (குழம்பியுள்ளது).
08. இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிக்க தேவன் இவனை அனுப்பினார் (திரும்பியுள்ளது).
09. பென்யமீனுடைய தாய்.
11. ஆசேருடைய கோத்திரத்தாள் (குழம்பியுள்ளது உதவி - லூக்கா).
13. இது பற்றிய உபதேசம் இரட்சிக்கப்படுகிறவர்களுக்கு தேவபெலனாயிருக்கிறது.

## மேலிருந்து கீழ்

01. ஆமோத்சின் குமாரன் (குழம்பியுள்ளது).
02. தான் திக்குவாய் என கர்த்தரிடம் கூறியவன் (தலைகீழ்).
03. யோர்தானுக்கு அக்கரையிலுள்ள இந்த இடத்தில் யோவான் ஞானஸ்நானம் கொடுத்தான்.
05. பெல்தெஷாத்சார்.
06. எல்க்கானாவின் மனைவி.
07. இரண்டாயிரம் பன்றிகள் என்றதும் இந்த பெயர் ஞாபகத்திற்கு வரும்.
10. எலிசாவின் வேலைக்காரன்.
12. இயேசு தனது முதலாம் அற்புதத்தை இந்த ஊரில் செய்தார் (தலைகீழ்).



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 40 இற்கான விடைகள்

### இடமிருந்து வலம்

01) பேதுரு
04) ரித்பத {பரி(சு)த்த(ம்)}
06) கொர்நேலியு
08) பாம்வ (பாவம்)
09) ஆகாரம்
11) சோதனை
13) யசேபரிர் (பரிசேயர்)
15) விஆ (ஆவி)

### மேலிருந்து கீழ்

01) பேப்கொ {கொப்பே(ர்)}
02) தரியு
03) யைத (தயை)
05) பஜெம் (ஜெபம்)
07) ர்ரகாக்யஆ (ஆயக்காரர்)
08) பாப்சோர் (சோப்பார்)
10) ம்லப (பலம்)
12) னைசலோ {(ஆ)லோசனை}
14) ரிந (நரி)

குறுக்கெழுத்துப் போட்டி 40க்கான சரியான விடை அனுப்பியவர்களில் பரிசுக்குரிய அதிஷ்டசாலி

**S.அரியரெத்தினம்**
298/11, கிளெனி லேன், மட்டக்களப்பு.

இப்போட்டியில் வெற்றி பெறுபவர் ஒரு வருடத்திற்கான எம் இதழைத் தொடர்ந்து இலவசமாகப் பெறுவார்.

**குறுக்கெழுத்துப்போட்டி 41ற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 31.05.2011**

**அனுப்ப வேண்டிய முகவரி:**

ஆசிரியர்,
குறுக்கெழுத்துப்போட்டி - 41
"வாலிபன்",
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்
மட்டக்களப்பு.

# சிறுவர்களுக்கான

## வினா விடைப் போட்டி இல : 33

1) "வெளிப்படுத்தின விசேஷத்திலே கூறப்பட்டுள்ள அனலும் குளிரும் இல்லாத சபை எது?

.......................................................................

2) வெளிப்படுத்தின விசேஷத்திலே பரிசுத்தவான்களுடைய ஜெபம் எதற்கு ஒப்பிடப்படுகிறது?

.......................................................................

3) முத்திரைகளை உடைக்க பாத்திரமானவர் யார் என்று சொல்லப்பட்டது?

.......................................................................

4) 1ம் முத்திரை உடைக்கப்பட்டபோது வந்த குதிரையின் நிறம் என்ன?

.......................................................................

5) 2ம் முத்திரை உடைக்கப்பட்டபோது வந்த குதிரையின் நிறம் என்ன?

.......................................................................



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வினா விடைப் போட்டி
32 இற்கான விடைகள்

1) எபேசு
2) எபேசு
3) சிமிர்னா
4) ஜெயங்கொள்பவர்கள்
5) பெர்கமு

S.கோபிகா
இல.02, வைத்தியர் வீதி,
தேற்றாத்தீவு – 2,
தேற்றாத்தீவு.

- இப்போட்டியில் வெற்றி பெறுபவர் அழகிய புத்தகம் ஒன்றினைப் பரிசாகப் பெறுவர்.
- வினா விடைப்போட்டி 33இற்கான விடைகளை அனுப்ப வேண்டிய கடைசித் திகதி : 31.05.2011

அனுப்ப வேண்டிய முகவரி :
ஆசிரியர்,
வினாவிடைப் போட்டி - 33
'வாலிபன்' -
கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயம்,
மட்டக்களப்பு.

## போட்டி பற்றிய நிபந்தனைகள் :

– 16 வயதிற்குட்பட்டவர்களாய் இருக்க வேண்டும்.
– ஞாயிறு பாடசாலை அதிபர் / ஆசிரியரின் கையொப்பத்துடன் பெயர், முகவரி, தொலைபேசி இலக்கம் போன்றவை தெளிவாய் எழுதப்பட்டிருக்க வேண்டும்.

# எங்களைத் தெரியுமா?

சத்தியம், ஜெயம், உபவாசம் மூவரும்
அறிந்தபடி நல்ல இணைபிரியா நண்பர்கள்.
தவக்காலத்தில் ஒரு வீட்டில் சந்தித்துக் கொண்டார்கள்.
சத்தியம் தன் நிலையைப் பக்குவமாய் பேசியது
தனித்து என்னை நாடுவோர்க்கு வார்த்தையே வாழ்க்கையாவேன்.
ஜெயம் பதிலுக்கு தலை உசுப்பி தன் பெருமை பேசியது
நான் இல்லை என்றால் இறை உறவே கிடையாது.
பாவம், உபவாசம் தலைகவிழ்த்து தன்னை உணர்ந்து சொல்லியது
நீங்கள் தனித்தெங்கும் எப்போதும் இருந்திடலாம்
என்னோடு நீங்கள் இருவருமே இல்லை என்றால்
வீணும் விருதாவும் வீண் பசியும் தான் மிச்சம்.

அ.ஞானா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யார் பாக்கியவான்கள்



இத்தலைப்பை வாலிபராகிய நாம் சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டியவர்களாக இருக்கின்றோம். ஏனென்றால் நாம் ஒவ்வொருவரும் பாக்கியவான்களாக கிறிஸ்துவுக்குள் வாழ்கின்றோமா? என சில வாலிபர்கள் யோசிக்காலம். பாக்கியவான்கள் என்றால் என்ன? இதை நான் எப்படி அறிவேன்? என சிந்திக்கிறீர்களா? அதை எடுத்துக்கூறும் சில வேத வசனங்களை நாம் சிந்தனைத் துளிகளாக பார்ப்போமா?....

☆ **கர்த்தருடைய வேதத்தில் பிரியமாயிருந்து, இரவும் பகலும் அவருடைய வேதத்தில் தியானமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். – (சங்கீதம் 1:2)**

☆ **எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ, எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான். – (சங்கீதம் 32:1)**

☆ **எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ, அவன் பாக்கியவான். – (சங்கீதம் 32:2)**

☆ **கர்த்தர் நல்லவர் என்பதை ருசித்துப்பாருங்கள்; அவர்மேல் நம்பிக்கையாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். – (சங்கீதம் 34:8)**

☆ **சிறுமைப்பட்டவன்மேல் சிந்தையுள்ளவன் பாக்கியவான்; தீங்குநாளில் கர்த்தர் அவனை விடுவிப்பார். – (சங்கீதம் 41:1)**

☆ **சேனைகளின் கர்த்தாவே, உம்மை நம்பியிருக்கிற மனுஷன் பாக்கியவான். (சங்கீதம் 84:12)**

☆ **சிட்சித்து, உம்முடைய வேதத்தைக்கொண்டு போதிக்கிற மனுஷன் பாக்கியவான். (சங்கீதம் 94:13)**

☆ **நியாயத்தைக் கைக்கொள்ளுகிறவர்களும், எக்காலத்திலும் நீதியைச் செய்கிறவர்களும் பாக்கியவான்கள். – (சங்கீதம் 106:3)**

☆ **அல்லேலூயா, கர்த்தருக்குப் பயந்து, அவருடைய கட்டளைகளில் மிகவும் பிரியமாயிருக்கிற மனுஷன் பாக்கியவான். - (சங்கீதம் 112:1)**

☆ **கர்த்தருடைய வேதத்தின்படி நடக்கிற உத்தம மார்க்கத்தார் பாக்கியவான்கள். (சங்கீதம் 119:1)**

☆ **கர்த்தருக்குப் பயந்து, அவர் வழிகளில் நடக்கிறவன் எவனோ, அவன் பாக்கியவான். - (சங்கீதம் 128:1)**

☆ **யாக்கோபின் தேவனைத் தன் துணையாகக் கொண்டிருந்து, தன் தேவனாகிய கர்த்தர்மேல் நம்பிக்கையை வைக்கிறவன் பாக்கியவான். – (சங்கீதம் 146:5)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

☆ ஞானத்தைக் கண்டடைகிற மனுஷனும், புத்தியைச் சம்பாதிக்கிற மனுஷனும் பாக்கியவான்கள். – (நீதி 3:13)

☆ ஆதலால் பிள்ளைகளே, எனக்குச் செவிகொடுங்கள்; என் வழிகளைக் காத்து நடக்கிறவர்கள் பாக்கியவான்கள். – (நீதி 8:32)

☆ என் வாசற்படியில் நித்தம் விழித்திருந்து, என் கதவு நிலையருகே காத்திருந்து, எனக்குச் செவிகொடுக்கிற மனுஷன் பாக்கியவான். – (நீதி 8:34)

☆ கர்த்தர்மேல் நம்பிக்கைவைத்து, கர்த்தரைத் தன் நம்பிக்கையாகக் கொண்டிருக்கிற மனுஷன் பாக்கியவான். – (எரேமியா 17:7)

☆ ஆவியில் எளிமையுள்ளவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது. – (மத்தேயு 5:3)

☆ துயரப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் ஆறுதலடைவார்கள். (மத்தேயு 5:4)

☆ சாந்தகுணமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் பூமியைச் சுதந்தரித்துக் கொள்ளுவார்கள். – (மத்தேயு 5:5)

☆ நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள். – (மத்தேயு 5:6)

☆ இரக்கமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் இரக்கம் பெறுவார்கள். (மத்தேயு 5:7)

☆ இருதயத்தில் சுத்தமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனைத் தரிசிப்பார்கள். – (மத்தேயு 5:8)

☆ சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவனுடைய புத்திரர் என்னப்படுவார்கள். – (மத்தேயு 5:9)

☆ நீதியினிமித்தம் துன்பப்படுகிறவர்கள் பாக்கியவான்கள்; பரலோகராஜ்யம் அவர்களுடையது. (மத்தேயு 5:10)

☆ என்னிமித்தம் உங்களை நிந்தித்துத் துன்பப்படுத்தி, பலவித தீமையான மொழிகளையும் உங்கள் பேரில் பொய்யாய்ச் சொல்வார்களானால் பாக்கியவான்களாயிருப்பீர்கள். – (மத்தேயு 5:11)

இவ்வசனங்களை சிந்தித்துப் பார்த்தால் நாம் கர்த்தருக்குள் **பாக்கியவான்களாக** வாழ வழி கிடைக்கும். வாழ்வோமா வாலிபரே......?

சகோ S.ரஞ்சன்
சின்னமுகத்துவாரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊழியம் செய்யும், செய்ய விரும்பும்
கிழக்கு மாகாண தமிழ் விசுவாசிகளுக்கு

# ஓர் நற்செய்தி!



மிஷனெறி (*Missionary*) ஊழிய நெறிகளையும்,
அதன் முறைகளையும், தலைமைத்துவ
கற்கை நெறிகளையும் வீட்டிலிருந்து
கொண்டே படிக்க **ஓர் அரிய வாய்ப்பு!**

# NLS வழங்கும்

அருட்பணியியல்
இளமானி பட்டப்படிப்பு

# Bachelor of Missiology

May - June

- அருட்பணிக்கான 4 வருட பட்டப்படிப்பு
- மிகக் குறைந்த கட்டண சேவை
- மாதாந்த விரிவுரைகளில் கலந்துகொள்ளல் போதுமானது

**கற்கை நெறிகள் ஆரம்பமாக இருக்கும் இடங்கள்**

May ⇨ கல்லாறு Contact : 077 - 6267281
June ⇨ திருகோணமலை Contact : 077 - 6267281


**அனைத்து திருச்சபை மாணவர்களையும் NLS அன்புடன் வரவேற்கின்றது**

# நிதாஸ் லங்கா சேவய (NLS)

மேலதிக தகவல்களுக்கு :
**D.Hezron - 077-9037001**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




எனக்கன்பான வாலிப சகோதர சகோதரிகளே! உங்கள் அனைவருக்கும் இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் வாழ்த்துக்கள்.

இன்றைய காலகட்டத்தில் நாம் அனைவரும் நீதிமான்களாக வாழ ஆசைப்படுகின்றோம். அதற்காக முயற்சியும் செய்கின்றோம். முயற்சி செய்வது அவசியம். ஏனென்றால் கர்த்தர் நீதிமான்களை கண்ணோக்கிப் பார்க்கின்றார். ஆனால் பல வேளைகளில் நாம் என்ன செய்கின்றோம்? நாங்கள் நீதிமான்களாக இருந்தால் என்ன? இல்லாவிட்டால் என்ன? மற்றவர்களை குறைகூறுவதையும் குற்றப்படுத்துவதையும் விரும்புகின்றோம். பிரியமானவர்களே வேதாகமம் கூறுகின்றது "நீ உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை உணராமல் உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பைப் பார்க்கிறதென்ன?" (மத்தேயு 7:3)

சிந்திப்போம், நமது நடத்தைகள், செயல்கள், பேச்சுக்கள் எல்லாவற்றையும் சோதித்து பார்ப்போம். நமது வாழ்க்கையில் பல இரகசியப் பாவங்களை வைத்துக்கொண்டு மற்றவர்கள் வாழ்வை பிழை என சுட்டிக்காட்டலாமா? நம்மில் அநேகர் பிறரை குற்றப்படுத்தி வேதனை அடையச்செய்வதில் இன்பம் காண்கிறார்கள். ஒருவன் ஒரு தவறு செய்தால் அதை எப்போதும் சுட்டிக்காட்டி வேதனைப்படுத்தி மோசமான வார்த்தைகளால் மனதைக் காயப்படுத்துகிறார்கள் . வேதம் சொல்லுகிறது "**நீங்கள் குற்றவாளிகளென்று தீர்க்கப்படாதபடிக்கு மற்றவர்களைக் குற்றவாளிகளென்று தீர்க்காதிருங்கள். ஏனெனில், நீங்கள் மற்றவர்களைத் தீர்க்கிற தீர்ப்பின்படியே நீங்களும் தீர்க்கப்படுவீர்கள். நீங்கள் மற்றவர்களுக்கு அளக்கிற அளவின்படியே உங்களுக்கும் அளக்கப்படும்."(மத்தேயு 7:1-2)**

பார்த்தீர்களா பிரியமானவர்களே மற்றவர்களுக்கு நீங்கள் எப்படிச் செய்கிறீர்களோ அப்படியே உங்களுக்கும் நடக்கும்.

அப்படியானால் தவறு செய்பவர்களை நாம் அப்படியே விட்டுவிடலாமா? முடியாதே, ஏனெனில் அவர்கள் கிறிஸ்துவை மறுதலித்தவர்களாய் பின்வாங்கிப் போய்விடு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வார்கள். இதற்கு நாம் என்ன செய்வது வேதம் சொல்லுகிறது **“மாயக்காரனே! முன்பு உன் கண்ணிலிருக்கிற உத்திரத்தை எடுத்துப்போடு; பின்பு உன் சகோதரன் கண்ணிலிருக்கிற துரும்பை எடுத்துப்போட வகை பார்ப்பாய்” – (மத்தேயு 7:5)**

ஆம் பிரியமானவர்களே! முதலில் எமது வாழ்க்கையிலுள்ள உத்திரங்களைக் களைவோம். பின்பு மற்றவர்களின் தவறுகளை அவர்களுக்கு உணர்த்துவோம். என்ன வாலிபர்களே சிந்தித்தீர்களா? மற்றவர்களைக் குற்றப்படுத்தி வேதனைப்படுத்தாமல் சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டு கிறிஸ்துவின் அன்பைக் காண்பிப்பவர்களாய் உண்மையான கரிசனையோடு தவறுகளை உணர்த்துவோம். நாமும் பரிசுத்தமாய் வாழ்வோம்.

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

**சுரேன்**
**கோட்டைமுனை**

# சோதனைகள்

**Charles**



**கி**றிஸ்துவை பின்பற்றுகிறவர்களுக்கு சோதனைகள் வருவது புதிதான விடயமல்ல. ஆனாலும் சோதனைகள் வரும்போது சோர்ந்துபோகிறோம். பெலவீனப்பட்டுப் போகின்றோம். ஏன் கர்த்தர் என்னைக் கைவிட்டார்? இயேசுவின் நாமத்தினால் தானே ஜெபம் பண்ணுகிறோம், இயேசுவைத்தானே பின்பற்றுகிறோம், மெய்யான தேவனைத்தானே ஆராதிக்கின்றோம், என்றெல்லாம் சோதனைகள் வரும்போது புலம்புகின்றோம். சிலவேளைகளில் கசப்பும் வெறுப்பும் இருதயத்திலுண்டாகி விசுவாசத்திலிருந்தும், இயேசுவைப் பின்பற்றுவதிலிருந்தும் பின்வாங்கி விடுகின்றோம். நம்மில் அநேகர் சோதனைகள் வருவதையே வெறுக்கின்றோம். ஆனாலும் நாம் ஒன்றைத் தெளிவாக அறிந்துகொள்ள வேண்டும். சோதனைகள் நமது ஆவிக்குரிய வாழ்க்கைக்கு அவசியமானதொன்றாகவிருக்கின்றது. யாக்கோபு இவ்வாறு கூறுகின்றார் **“சோதனையைச் சகிக்கிற மனுஷன் பாக்கியவான். அவன் உத்தமனென்று விளங்கினபின்பு கர்த்தர் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின ஜீவகிரீடத்தைப் பெறுவான்”-(யாக்கோபு 1:12)** மேலும் **“என் சகோதரரே, நீங்கள் பலவிதமான சோதனைகளில் அகப்படும்போது, உங்கள் விசுவாசத்தின் பரீட்சையானது பொறுமையை உண்டாக்குமென்று அறிந்து, அதை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**மிகுந்த சந்தோஷமாக எண்ணுங்கள்". (யாக்கோபு 1:2-3)** என்றும் யாக்கோபு கூறுகின்றார்.

சோதனைகள் நமது ஆவிக்குரிய வாழ்க்கையைப் புடமிடுகிறது. கிறிஸ்து நம்மில் பிரதிபலிக்கும் படியாக பொறுமை என்னும் நற்குணத்தை நம்மில் உண்டாக்கி, இயேசுவுக்கு நற்சாட்சிகளாக நாம் வாழும்படி நம்மை மறுரூபப் படுத்துகின்றது. அதுமட்டுமல்லாது சோதனைகளின் போது நாம் விழுந்தாலும் நாம் பெலத்தோடே மீண்டும் எழுந்து அவருக்காக நீண்ட பயணம் செய்யும்படி நம்மையேற்படுத்துகிறது. அன்றியும் நாம் கர்த்தரைப் பின்பற்றுகிறபோது சோத னைகள் வருகின்றதென்றால், அச்சோதனைகள் மத்தியிலும் கர்த்தர் நம்மோடு இருக்கின்றார் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது. இயேசு தமது சீஷர்களை அழைத்துக்கொண்டு படகிலே சென்ற போது பலத்த சுழல்காற்று உண்டாகி, படகு நிரம்பத்தக்கதாக அலைகள் அதன்மேல் மோதிற்று. இயேசுவோ நித்தி ரையாயிருந்தார். சீஷர்கள் இயேசுவை நோக்கி : "போதகரே, நாங்கள் மடிந்து போகிறோம். உமக்கு கவலையில்லையா?" என்றார்கள். இங்கே சீஷர்களுக்கு சோதனை உண்டான போது அவர்கள் விசுவாசத்தையிழந்து பயந்துவிட்டார் கள். ஆனாலும் கர்த்தர் அங்கே நடக்கிறவைகளை அறிந்திருந்தார். இருந்தும் பாராதவர்போல் (நித்திரையாக) இருந்தார். நமக்கும் சோதனைகள் வரும்போது கர்த்தர் நம்மைக் கைவிட்டுவிட்டார் என்று சிலவேளைகளில் நினைக்கத் தோன்றும். ஆனாலும் நாம் ஒன்றை மறந்துவிடக்கூடாது. இயேசு நம்மோடே நம்மருகே இருக்கிறார்.

நமது வாழ்க்கையில் சோதனைகள் ஏற்படும்போது கர்த்தரைப் பின்பற்று வதிலிருந்து பின்வாங்காமல் தொடர்ந்து அவரோடே கூட நடப்போமானால் அவர் நம் கால்களைத் திடப்படுத்துவார். அவரே சோதிக்கப்பட்டு பாடுபட்ட தினால் சோதிக்கப்படுகிறவர்களுக்கு உதவி செய்ய வல்லவராயிருக்கிறார் என்று இயேசுக் கிறிஸ்துவைப் பற்றி வேதத்தில் எழுதப்பட்டிருக்கின்றது. அவரைப் பின்பற்றுகிறவர்களும் மற்றவர்களுக்கு உதவி செய்யும்படிக்கு சிலகாலம் சோத னைக்குட்படுவது அவசியமாயிருக்கின்றது. **"ஆனாலும் நான் போகும் வழியை அவர் அறிவார். அவர் என்னைச் சோதித்தபின் நான் பொன்னாக விளங்குவேன்"- (யோபு 23:10)** என்று யோபு கூறுகின்றான். எனவே நாமும் விசுவாசத்தில் தளர்ந்து போகாது நல்ல ஓட்டத்தை ஓடி கர்த்தருக்குள் இளைப்பாறுவோமாக!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# "வருங்காலங்கள் உனதாகட்டும்"
# வாலிபர் பாசறைகள் - 2011

திருமாவட்ட வாலிபர்களை ஒன்று திரட்டும் வகையிலான வாலிபர் பாசறைகள் கடந்த மாதத்தில் வடக்கிலும் கிழக்கிலும் நடைபெற்றது. வடக்கில் சுவிசேஷ பாசறையாகவும் கிழக்கில் ஆழ்நிலைப் பாசறை யாகவும் இது இடம்பெற்றது சிறப்பம்சமாகும். இப்பாசறைகள் எமது திருமாவட்டத்தலைவர் அருட்திரு **S.D.**தயாசீலன் அவர்களது வழிகாட் டலில் வடக்கில் அருட்திருகள் **T.**கிறிஸ்டிகுமார், டெய்சி தேவகுமார், தேவகுமார், தேவநேசன் மற்றும் பரு, கட்டவேலி சேகர திருப்பணியாளர் களின் உதவியுடன் கர்த்தரின் கிருபையால் நடந்தேறியது. இதில் 115 வாலிபர்கள் கலந்துகொண்டு தங்களை கிறிஸ்துவுக்கென்று அர்ப்பணித் தார்கள்.

கிழக்கில் அருட் திருகள் **S.S.**ரென்ஸ், சாம் சுரேந்திரன், ரவி முருகுப் பிள்ளை, **J.**றிச்சேட், சதீஸ் மற்றும் சேகர வாலிப செயலாளரின் உதவி யுடன் இடம்பெற்றது. இப்பாசறையில் 183 வாலிபர்கள் கலந்து கொண்டு திருமறைக்கூடாக ஆழ்நிலைப்படுத்தப்பட்டதுடன் 30 பேர் தங்களை முழுநேர திருப்பணிக்கென ஒப்புக்கொடுத்தனர்.


இவ்விரண்டு பாசறைகளிலும் தேவ செய்திக்கூடாக சகோ. ஜோசப் நவீன், சகோ. ஜெயராஜ், சகோ. சுதாஸ் ஆகியோர் வழிநடத்தினார்கள். திருமறைப் படிப்புக்களை எமது குருமார் வழிநடத்தினர்.


இப்பாசறைகள் கிறிஸ்துவுக்கு மகிமையாக நடந்தேற தங்கள் ஜெபங் களில் பெரிதும் தாங்கிய ஒவ்வொருவருக்காகவும் தேவனை ஸ்தோத்தரிக் கின்றோம். அத்தோடு உதாரத்துவ காணிக்கைகள் மூலம் தாங்கிய ஒவ் வொருவருக்கும் எமது நன்றிகள். கர்த்தர் தாமே ஜெபத்திலும், தன்னார்வ உதவிகளிலும், காணிக்கைகளிலும் தாங்கிய ஒவ்வொருவரையும் ஆசீர்வ திப்பாராக.

**"எங்களுக்கு அல்ல, கர்த்தாவே, எங்களுக்கு அல்ல, உமது கிருபையினிமித்தமும், உமது சத்தியத்தினிமித்தமும், உம்முடைய நாமத்திற்கே மகிமை வரப்பண்ணும்"** (சங்கீதம் - 115:01)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





வடக்கு





கிழக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



உங்கள் ஜெபத் தேவைகளை எங்களுக்குத் தபால் மூலமாகவோ, மின்னஞ்சல் மூலமாகவோ, SMS மூலமாகவோ அனுப்பி வைக்கலாம்.

**SMS க்கான இலக்கங்கள் :**

**077-7813269, 077-2335106, 0779-584930, 077-7718847**

வாலிபர்களுக்கான விஷேட ஜெபம் ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும் காலை 7.00 மணிக்கு **கோட்டைமுனை மெதடிஸ்த ஆலயத்தில்** இடம்பெறும்.

இப்புத்தகத்தை தங்களது சபைகளிலும், அறிமுகம் செய்ய விரும்புபவர்கள் தயவாய் எம்மைத் தொடர்பு கொள்ளவும். இதன் மூலமாய் வரும் ஆசீர்வாதங்கள் தங்களது வாழ்வையும், சபைகளையும் நிரப்புவதாக!

## மெதடிஸ்த வாலிபர் ஒன்றியம் - கோட்டைமுனை.


கடிதத் தொடர்புகளுக்கு :

**ஆசிரியர்,**

**"வாலிபன்" சஞ்சிகை,**

மெதடிஸ்த ஆலயம், கோட்டைமுனை, மட்டக்களப்பு, இலங்கை.

மின்னஞ்சல் :vaalipan_kyf@yahoo.com



சன் அச்சகம் - மட்டக்களப்பு. 065-2222597





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org